NST Campus

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026

| தரம் 09 | தமிழ் மொழியும் இலக்கியமும் | 2 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டிலக்கம் : ........................ புள்ளிகள்

## பகுதி – I

1) “பெருமாள் அசாதாரண சூழ்நிலையால் கலவரம் அடைந்தான். இங்கு **“கலவரம்”** என்பதன் ஒத்த பதம்

1. குழப்பம் 2. சமாதானம் 3. விளக்கம் 4. பிரிவு

2) வெளிநாட்டிலுள்ள தந்தைக்கு மகன் திருமுகம் அனுப்பினான். இங்கு **திருமுகம்** என்பதன் ஒத்த சொல்

1. பணம் 2. பரிசு 3. ஆவணம் 4. கடிதம்

3) கமலன் பாம்பைக்கண்டு வெருவி ஓடினான். இங்கு **வெருவி** என்பதன் எதிர்ப்பதம்

1. அவா 2. துணிவு 3. பயந்து 4. வியந்து

4) பிணக்குகளை அகற்றி அமைதியான மனப்பாங்கை வளர வைப்பவரே உபாத்தியாயர். இங்கு **பிணக்கம்** என்பதன் எதிர்ப்பதம்.

1. சுணக்கம் 2. துலக்கம் 3. இணக்கம் 4. விளக்கம்

5) அவன் பாரதியாரின் கவிதைகளை சுவைத்துப் படித்தான். இவ்வாக்கியத்தில் **அவன்** என்ற சொல் குறிப்பது

1. முன்னிலை ஒருமை ஆண்பால் 2. படர்க்கை ஆண்பால் உயர்திணை
3. படர்க்கை பெண்பால் உயர்திணை 4. முன்னிலை பன்மை ஆண்பால்

6) இராமன் சீதையின்.....................வாடினான். இதில் இடைவெளிக்குப் பொருத்தமான சொல் எது?

1. துன்பத்தால் 2. பிரிவுத்துயரால் 3. அன்பால் 4. வலிமையால்

7) முதலெழுத்துக்களில் அடங்கும் எழுத்துத் தொகுதி.

1. உயிர் எழுத்துக்களும் ஆய்தமும்
2. மெய் எழுத்துக்களும் உயிர்மெய் எழுத்துக்களும்
3. மெய்யெழுத்துக்களும் ஆய்தமும்
4. உயிர் எழுத்துக்களும் மெய் எழுத்துக்களும்

8) ஐயோ என் பிள்ளையைக் காணவில்லையே இதில் இடம் பெற வேண்டிய நிறுத்தற் குறியீடு

1. ? ! 2. , ! 3. ! ! 4. . !

9) முன்னிலைப்பன்மை பெயராக வருவது.

1. அவன் 2. நீங்கள் 3. அவள் 4. தாங்கள்.

10) “எமது தோட்டத்தில் அப்பா வெற்றிலை நட்டார். இங்கு வெற்றிலை என்பது

1. சினையாகு பெயர் 2. குணவாகுபெயர்

3. தொழிலாகு பெயர். 4. காலவாகு பெயர்.

11) பதுங்கல், வெளிச்சம், மறைதல் என்பவற்றை குறிக்கும் தனிச் சொல்

1. ஒழி 2 ஒளி 3. ஓடு 4. ஓலி

12) சிறு துரும்பும் பல் குத்த உதவும்” என்ற பழமொழிக்குப் பொருத்தமான வேறு ஒரு பழமொழியாக வருவது.

1. இக்கரை மாட்டுக்கு அக்கரைப்பச்சை
2. ஆழமறியாமல் காலை விடாதே
3. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்
4. நண்டு கொழுத்தால் வளையில் தங்காது.

13) சிறுவர்கள் சுற்றுலாவின் போது கடலலையின் அழகுக் காட்சியை பார்த்து ரசித்தனர். இங்கு கடலலை

எனும் சொல் புணர்ந்திருப்பது.

1. உயிர் முன் உயிர் 2. உயிர்முன் மெய்
3. மெய் முன் மெய் 4. மெய்முன் உயிர்

14) தற்கிழமைப் பொருள் கொண்ட வேற்றுமைக்கு உதாரணம்

1. மரத்தின் கனி 2. கமலனது கை
3. புவியின் வலியவன் 4. மாணவனது பை

15) “ர்யசன னளைம” என்பதன் தமிழ் வடிவம்

1. வன்தட்டு 2. வன்பொருள் 3. இறுவட்டு 4. மென்பொருள்

16) தமயந்தி அதிகாலையில் வந்தது. இதிலுள்ள வழுவானது

1. காலவழு 2. இடவழு 3. பால் வழு 4. திணைவழு

17) ஒரு நூலை வெளியிடுவோர் அந்நூலைப்பற்றி கூறும் உரை.

1. முன்னுரை 2. பதிப்புரை 3. பொழிப்புரை 4. முகவுரை

18) திருக்குறளில் காணப்படும் மூன்று பெரும் பிரிவுகளுள் ஒன்று

1. அறத்துப்பால் 2. அன்புடைமை 3. ஒழுக்கமுடைமை 4. அழுக்காறாமை

19) “வயோதிபர் பாதையில் மெதுவாக நடந்தார்”. எனும் வாக்கியம்

1. செயப்படு பொருள் வினை 2. செயப்படு பொருள் வேற்றுமை
3. செயப்படு பொருள் குன்றிய வினை 4. செயப்படு பொருள் குன்றா வினை

20) பின்வரும் வாக்கியங்களை ஒழுங்கு படுத்தினால் வரும் விடை

அ. அதிகாரப் போட்டியில்லாத, வெற்றி தோல்விகளில்லாத, சாந்தியும் சமாதானமும் உள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்குவதே பௌத்தத்தின் நோக்கம்.
ஆ. எனினும் புத்த பகவான் தான் சாதாரண மனிதப் பிறவியென ஒப்புக் கொண்டார்.
இ. புத்த பகவான் பூரண மனிதப்பண்பு உடையவர்
ஈ. பிற்கால மக்கள் புத்த பகவானை அதிமனிதன் என கொண்டாடினர்.
உ. அதனால் புத்த பகவான் மனிதருள் மிகச் சிறந்ததவராக கருதப்பட்டார்.

1. ஆ, இ, ஆ, ஈ, உ 2. அ, இ, உ, ஆ, ஈ

3. இ, உ, ஈ, அ, ஆ 4. உ, ஈ, ஆ, அ, இ

## பகுதி - II

01. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. விஞ்ஞான வளர்ச்சியின் விளைவுகள்
2. வாசிப்பின் முக்கியத்துவம்
3. இயற்கை உணவுகளும் ஆரோக்கியமான வாழ்வும்
4. காட்டு வழிப்பயணம்

02. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து 75 சொற்களில் அமையுமாறு எழுதுக.

1. உமது கிராமத்தில் பழுதடைந்த நிலையில் காணப்படும் கிணறு ஒன்றினை புனர்நிர்மாணம் செய்து தரும்படி பிரதேச செயலாளருக்கு ஒரு கடிதம் எழுதுக.

2. ‘‘தொற்று நோய்களிலிருந்து விடுபடுவோம்’’ எனும் தொனிப்பொருளில் துண்டுப் பிரசுரம் ஒன்று எழுதுக.

03. பாடநூலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. நளனின் ஆட்சிச் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
2. காட்டுவழி எனும் கவிதையில் காட்டுப்பாதையில் அச்சம் தரும் அம்சங்கள் எவை?
3. கனகாம்பரம் ‘‘அழகு’’ என்பதற்கு கொடுக்கும் விளக்கம் யாது?
4. துருவாச முனிவர் சகுந்தலைக்கு இட்ட சாபம் யாது?
5. தமது இளமையின் நீடிப்பிற்கு பிசிராந்தையார் கூறிய காரணங்கள் எவை?

04. பின்வரும் பாடலை அடிப்டையாகக் கொண்டு விடை எழுதுக.

‘‘தையல் துயர்க்குத் தரியாது தஞ்சிறகாம்
கையால் வயிற லைத்துக் காரிருள் வாய் - வெய்யோனை
வாவுபரித்தே ரேறிவா என்றழைப்பன போல
கூவினவே கோழிக்குலம்’’

1. கூவியவை எவை?

2. பின்வரும் சொற்களுக்கான ஒத்தசொல்லை பாடலிலிருந்து தெரிக

   1. துன்பம் 2. சூரியன்

3. தையல் என்று இங்கு குறிப்பிடப்படுபவர் யார்?

4. பிரித்தெழுதுக.

   1. காரிருள் 2. என்றழைப்பன

5. நளவெண்பா நூலின் ஆசிரியர் யார்?

05. பின்வரும் சொற்களைப் பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.

1. அடவி

2. பூவை
3. தடாகம்
4. களங்கம்
5. வருக்கை